Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 26.06.2025 /

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி 26.06.2025 வியாழக்கிழமை நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுடெல்லியில் சர் கங்காராம் புற்றுநோய் மையத்தை திறந்து வைத்தார்.

இந்தி மொழி மற்ற இந்திய மொழிகளின் துணை என்றும், அதை மற்ற மொழிகளுக்குப் போட்டியாக கருதக்கூடாது என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்துள்ளது.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்பதற்கான இயக்கமாக செயல்பட வேண்டும் என துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

*முர்மு (5 )*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுடெல்லியில் சர் கங்காராம் புற்றுநோய் மையத்தை இன்று திறந்து வைத்தார். புற்று நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை அளிக்கும் வகையில் அதி நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனையை பார்வையிட்ட அவர் நோயாளிகளுடன் கலந்துரையாடினார்.

*அமித்ஷா மொழி (14 )*

இந்தி மொழி மற்ற இந்திய மொழிகளின் துணை என்றும், அதை மற்ற மொழிகளுக்குப் போட்டியாக கருதக்கூடாது என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற அலுவல் மொழித் துறையின் பொன்விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு ஊடகம் மட்டுமல்ல ஒரு தேசத்தின் ஆன்மா என்று கூறினார். மொழிகளை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திய அவர், மக்கள் பேசும் மொழியில் நிர்வாகம் நடைபெற வேண்டும் என்றும், தெரிவித்தார். ஒருவர் தனது மொழி குறித்து பெருமிதம் கொண்டு தனது மொழியில் தன்னை வெளிப்படுத்தாத வரை அவர் அடிமை மனநிலையில் இருந்து விடுபட முடியாது என்று திரு. அமித்ஷா கூறினார். JEE, NEET மற்றும் CUET தேர்வுகள் தற்பொழுது 13 மொழிகளில் நடத்தப்பட்டு

வருவதாக குறிப்பிட்ட அவர், தற்பொழுது 95 சதவிகிதம் பேர் தங்கள் தாய்மொழியிலேயே காவலர் தேர்வுகளை எழுதுவதாக கூறினார்.

*ராஜ்நாத் சிங் (13 )*

சீனாவின் கிங்டாவோ நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்துள்ளது. அந்த கூட்டு பிரகடனத்தின் கருத்துக்களில் இந்தியா திருப்தி அடையவில்லை என்றும், எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த மாநாட்டில் பங்கேற்ற பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இந்த ஆவணத்தை அங்கீகரிக்க மறுத்ததால் இந்த மாநாடு கூட்டு அறிக்கை இல்லாமலேயே முடிவடைந்ததாக நம்பப்படுகிறது. முன்னதாக, இந்த மாநாட்டில் உரையாற்றிய திரு. ராஜ்நாத் சிங், தீவிரமயமாக்கல் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராக ஒன்றுபட்ட உலகளாவிய ஒத்துழைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்தினார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.

…. வாய்ஸ் …

*ராஜ்நாத் சிங் - வாய்ஸ் (19)*

தீவிரவாதம் பிராந்திய அமைதி மற்றும் நம்பிக்கைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று குறிப்பிட்ட திரு ராஜ்நாத் சிங், அமைதியும், வளர்ச்சியும், பயங்கரவாதத்துடன் இணைந்ததாக இருக்க முடியாது என்றார். நேபாள நாட்டவர் உட்பட 26 பொதுமக்கள் கொல்லப்பட்ட கொடூரமான பகல்காம் பயங்கவாத தாக்குதல் பற்றி குறிப்பிட்ட அவர், எல்லை தாண்டிய பயங்கரவாத உள்கட்டமைப்பை நிர்மூலமாக்குவதற்காக ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் இந்தியா தனது தற்காப்பு உரிமையை பயன்படுத்தியதாக கூறினார். இந்தியாவுக்கு எதிரான பயங்கவாதத்தின் மையங்கள், இனி பாதுகாப்பாக இருக்க முடியாது என்பதை இந்தியா எடுத்துக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்தார். தங்களின் குறுகலான மற்றும் சுயநல நோக்கங்களுக்காக பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள், அதனை வளர்ப்பவர்கள் பின் விளைவுகளை சந்திக்க வேண்டியது கட்டாயம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் புதிய உறுப்பினராக இணைந்த பெலாரஸ் நாட்டிற்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். மாநாட்டின் போது ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் திரு. Andrey Belousov-வை திரு. ராஜ்நாத் சிங் சந்தித்து இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நடப்பு ஆண்டு தலைவராக சீனா பொறுப்பு வகிப்பது குறிப்பிடத்தக்கது.

*ஆக்சியம் -4 (18 )*

இந்திய விமானப்படைக் குழு கேப்டன் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட ஆக்சியம் -4 குழுவினர் பயணம் செய்த Space X dragon விண்கலம் இன்று மாலை 4 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது. இதன் மூலம் 41 ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளிக்குப் பயணம் மேற்கொண்ட 2ஆவது இந்திய விண்வெளி வீரராக சுபான்ஷு சுக்லா திகழ்கிறார். கடந்த 1984ஆம் ஆண்டு ராகேஷ் ஷர்மா விண்வெளிக்கு ரஷ்யாவுடன் இணைந்து பயணம் மேற்கொண்டார். ஆக்சியம்-4 விண்வெளி திட்டத்தில் இந்திய வீரருடன், அமெரிக்கா, போலந்து மற்றும் ஹங்கேரியைச் சேர்ந்த விண்வெளி வீரர்களும் இடம் பெற்றுள்ளனர். ஆக்சியம்-4 திட்டமானது ஒரு அறிவியல் சாதனையாக மட்டுமல்லாமல் உலகளாவிய தொழில்நுட்ப சக்தியாக இந்தியா உயர்ந்து வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இது விண்வெளி ஆராய்ச்சிகளை வழி நடத்தவும், உலகளாவிய பணிகளுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் இந்தியாவின் திறனை வலுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் வெற்றிகரமாக இணைந்ததற்கு இந்திய விண்வெளி வீரர் கேப்டன் சுபான்ஷு சுக்லா மற்றும் ஆக்சியம்-4 திட்ட குழுவிற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*அமித்ஷா (10 )*

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், போதைப்பொருள் பழக்கத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களை மீட்டு, மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு முனைப்புடன் செயலாற்றி வருவதாக திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார். இத்தினத்தையொட்டி இன்று நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

*கைலாஷ்நாதன் 1 (9 )*

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி இன்றுகாலை நடைபெற்ற போதைப்பொருள் இல்லா புதுச்சேரி என்ற விழிப்புணர்வு நடைப்பயணத்தில் துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கலந்து கொண்டார். ஒரு தனியார் அமைப்பு சார்பில் புதுச்சேரி கடற்கரைச் சாலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய துணைநிலை ஆளுநர், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள்

பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்பதற்கான இயக்கமாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அவர் கூறுகையில்,

… வாய்ஸ் …

*கைலாஷ்நாதன் - 2 ( 14 )*

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமலிங்கம், தலைமை காவல் ஆய்வாளர் திரு. சத்திய சுந்தரம், சென்னை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவில் கூடுதல் டிஜிபி திரு. தீபக் கௌஷிக், மாணவ, மாணவிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி காரைக்காலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், துணை ஆட்சியர் திரு. செந்தில்நாதன் கலந்து கொண்டு, போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான உறுதிமொழியை செய்து வைத்தார்.

ஏனாமில் நடைபெற்ற சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தின நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் திரு. புத்தி அகில் கலந்து கொண்டு பேசும்போது, போதைப்பொருள் பழக்கம் என்பது புதைக்குழி போன்றது என்று குறிப்பிட்டார். நிகழ்ச்சியின் போது, போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஏனாம் மண்டல நிர்வாகி திரு. முனுசாமி பரிசுகள் வழங்கினார்.

*காரைக்கால் ஜிப்மர் (7 )*

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவக் குழுவினர் வரும் சனிக்கிழமை, காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை தந்து, இருதயம் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கவுள்ளனர். அன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறும் என்றும், இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

*சிபிஎஸ்இ (11)*

மத்திய இடைநிலை கல்வி வாரியம் சிபிஎஸ்இ நடப்பு கல்வியாண்டு முதல் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ஆண்டுக்கு 2 முறை நடைபெறும் என்று அறிவித்துள்ளது. இந்த புதிய அறிவிப்பின்படி முதல் தேர்வு, பிப்ரவரி மாதம் நடைபெறும் இதில் அனைத்து மாணவர்களும் கட்டாயம் தேர்வு எழுத வேண்டும் என்றும், இந்த தேர்வில் எடுத்த மதிப்பெண்களை விட கூடுதல் மதிப்பெண் எடுக்க விரும்பும் மாணவர்கள் மே மாதத்தில் நடத்தப்படும் 2ஆவது பொதுத் தேர்வில் கலந்து கொள்ளலாம். CBSE-ன் இந்த அறிவிப்பு குறித்து பாராட்டு தெரிவித்துள்ள மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், இது மாணவர்களுக்கு தேர்வு தொடர்பான மன

அழுத்தத்தை குறைக்கும் என்றும் மகிழ்ச்சியான கற்றல் சூழலை வளர்க்க உதவும் எனவும் தெரிவித்துள்ளார்.

*சி.ஆர். பாட்டீல் (10 )*

நாடு முழுவதும் 15 கோடிக்கும் அதிகமாக வீடுகளுக்கு குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக, மத்திய நீர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார். இது குறித்து இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்னும் 3 ஆண்டுகளில் எஞ்சியுள்ள 4 கோடி வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுவிடும் என்றார். மேலும் பேசிய அவர், பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவதால், வயிற்றுப் போக்கு தொடர்பான நோய்கள் குறைந்துள்ளதாகவும், இதனால் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும், உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருப்பதாக கூறினார்.

*வானிலை ( 10)*

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக வரும் 28ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்

என்றும், ஒருசில இடங்களில், பலத்த தரைக்காற்று, மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மல்யுத்தம் (4 )*

வியட்நாமில் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டதையும் வென்றுள்ளது. இப்போட்டியில், 5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

*ஆப்ரேஷன் சிந்து (7)*

ஆப்ரேஷன் சிந்து நடவடிக்கையின் மூலம் ஈரானில் இருந்து மேலும் 272 இந்தியர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர். இன்று அதிகாலை மாஷாத்தில் இருந்து புதுடெல்லிக்கு வந்த சிறப்பு விமானத்தில் இந்தியர்களுடன், 3 நேபாள நாட்டைச் சேர்ந்தவர்களும், அழைத்து வரப்பட்டனர். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீப் ஜெய்ஸ்வால், ஈரானிலிருந்து ஆப்ரேஷன் சிந்து நடவடிக்கையின் மூலம் இதுவரை 3 ஆயிரத்து 426 இந்தியர்தகள் தாயகம் வந்துள்ளதாக கூறியுள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுடெல்லியில் சர் கங்காராம் புற்றுநோய் மையத்தை திறந்து வைத்தார்.

இந்தி மொழி மற்ற இந்திய மொழிகளின் துணை என்றும், அதை மற்ற மொழிகளுக்குப் போட்டியாக கருதக்கூடாது என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட இந்தியா மறுத்துள்ளது.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்பதற்கான இயக்கமாக செயல்பட வேண்டும் துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**